MALAI MALAR

PAGE NO: 02

DATE: 24.03.23



# மாணவிகளுக்கு 2 நாள் தற்காப்பு பயிற்சி

புதுச்சேரி, மார்ச்.24—
புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியின் உயிர்வேதியில் துறை, இளைஞர்கள், குழந்தைகள் தலைமைத்துவ அறக்கட்டளை இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடினர்.

இதையொட்டி பெண்கள் தலைமையில் பெண்கள் என்ற தலைப்பில் 2 நாள் தற்காப்பு திட்ட ப்யிற்சி முகாம் நடத்தப்பட்டது.

கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். உதவி பேராசிரியை வரலட்சுமி வரவேற்றார். அறக்கட்டளை இணை இயக்குனர் யுவயாழினி, பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்.

பயிற்சி முகாமில் பங்கேற்ற மாணவிகளுக்கு சான்றி தழ்கள் வழங்கப்பட்டன. உயிர்வேதியியல் துறை தலைவர் தாரகேஸ்வரி நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை துறை ஆசிரியர் கீதா மற்றும் மாணவிகள் செய்திருந்தனர்.

MALAI MALAR

PAGE NO: 02 DATE: 24.03.23

# திரைப்பட குழுவினருடன் மாணவர்கள் கலந்துரையாடல்

புதுச்சேரி, மார்ச்.24— புதுவை பல்கலைக்கழக சமூககல்லூரியில் விஷூவல் கம்யூனிகேஷன் துறையினர், வரலாற்று திரைப்படமான யாத்திசை குழுவினருடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த 100—க்கும் மேற்பட்ட விஷூவல் கம்யூனிகேஷன் மாணவர்கள் பங்கேற்றனர். துறை தலைவர் சுரேஷ்குமார் வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

படத்தின் நடிகர்கள் சக்திமித்ரன், சேயோன், எடிட்டர் மகேந்திரன், கணேசன், ஒளிப்பதிவாளர் அகிலேஷ் காத்தமுத்து ஆகியோர் படத்தின் நோக்கம் பற்றி விளக்கினர். மாணவர்களின் சந்தேகம், கேள்விகளுக்கு விளக்கமளித்தனர். தமிழ் இலக்கிய பேராசிரியர் முருகையன் வாழ்த்தி பேசினார்.